# கடனைத் திருப்பிக் கொடுக்காதவர்களின் வள்ளங்கள் பறிமுதலாகும்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 | மலர் 10 | இதழ் 87
போன் 389 | National Tamil Daily | தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கேசு சித்திரை 26 ஸபர் 9 புதன்கிழமை (8-5-68)

## பொலிஸாருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், புதன் அரசாங்க கடனில் வள்ளங்கள் செய்து கடனைத் திருப்பிக் கொடுக்காதவர்களின் வள்ளங்களை பொலிசார் பறிமுதல் செய்வார்கள். இதற்கான உத்தரவொன்றை மீன்பிடி இலாகா டைரக்டர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

கொடுக்கப்பட்ட தவணையில் வள்ளம் அமைக்க அரசாங்கம் கொடுத்த கடனைத் திருப்பிக்கட்டாதவர்களின் வள்ளங்கள் இப்புதிய உத்தரவினால் பறிமுதலாகும். பணம் கட்டாதவர்களின் பெயர்கள் அடங்கியவிபரங்களும் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பொலிசாரால் கைப்பற்றப்படும் வள்ளங்கள் முதலில் 1000 ரூபா பிணைப் பணம் செலுத்தித்திருப்பிப் பெறவும் கடன்காரர்களுக்கு மீன்பிடி இலாகாஒழுங்கு செய்துள்ளது. [கா. நி.]

---

### மக்கள் பிரதிநிதிகள் சபையில்

# தீவுப்பகுதி எம். பி. எதிர்க்கட்சிக்கு மாறினர்



## தமிழரசின் சுயேச்சைப்பிரதிநிதியாக தொடர்ந்து இருப்பாராம்

கொழும்பு, செவ்வாய்

தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட தீவுப் பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் அரசாங்கத் தரப்பிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சி தரப்பிலுள்ள ஓர் ஆசனத்தில் அமர்ந்தார். பார்லிமெண்டில் ஒரு சுயேச்சை தமிழரசுக் கட்சிப் பிரதிநிதியாகத் தொடர்ந்து இருக்கப் போவதாக அவர் சபையில் அறிவித்தார்.

ஆட்கள் பதிவு (அடையாள அட்டைகள்) மசோதாவை எதிர்த்து ஜனப்பிரதிநிதிகள் சபையில் திரு. நவரத்தினம் பேசியதுடன் அதை எதிர்த்து வாக்களிக்கப் போவதாகவும் அறிவித்திருந்தார். கட்டுப்பாட்டை மீறிய செயலாகுமெனத் தெரிவித்து அவரை கட்சியிலிருந்து வெளியேற்றுவதென கட்சியின் பொதுக் குழு தீர்மானம் நிறைவேற்றியது.

ஆட்கள் பதிவு [அடையாள அட்டைகள்] மசோதா நேற்று சபையில் தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படாமலே இரண்டாம் முறையாக நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென திரு. நவரத்தினம் கோரினர். ஆயினும் வாக்கெடுப்புக்கு விடவேண்டிய அவசியமேற்படவில்லை யென சபாநாயகர் தெரிவித்தார்.

இன்று ஜனப்பிரதிநிதிகள் சபை பதில் சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் கூடிய போது கேள்வி நேரத்தின் பின் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் எழுந்து தாம் தொடர்ந்து ஆளும் கட்சியில் ஓர் அங்கத்தவராக இருக்க விரும்பவில்லையென்றும் எதிர்தரப்பில் ஓர் ஆசனத்திலிருக்கப் போவதாகவும் தாம் சுயேச்சை தமிழரசுக் கட்சிப் பிரதிநிதியாகத் தொடர்ந்து இருக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

இதற்கான காரணத்தை திரு. நவரத்தினம் விளக்கிக் கூறுகையில் தம்மை தமது கட்சி வெறுத்து ஒதுக்கிய பின்னர் தாம் அவர்களுடன் அரசாங்கத் தரப்பில் இருப்பது முறையுமல்ல நியாயமுமல்ல என்று கூறினர்.

1964-ம் ஆண்டில் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டபின் 1965-ம் ஆண்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு தமிழரசுக் கட்சிக் குழு உதவியும் ஒத்துழைப்பும் அளித்ததென்றும் கூறிய திரு. நவரத்தினம், இப்பொழுது நடைபெறும் சம்பவங்கள் ஜனநாயக வாழ்க்கை முறைக்கு முரணானதென்றார். "ஜனநாயகம் ஒரு சமூகத்துக்கோ, ஒரு குறிப்பிட்ட

[6-ம் பக்கம் பார்க்க]

---

## அண்ணா 13ம் திகதி தாயகம் திரும்புவார்

சென்னை, மே 7

தமிழக முதன் மந்திரி இம் மாதம் 13ந் தேதி தாயகம் திரும்புவார். நேற்றிரவு டோக்கியோவிலிருந்து திரு. அண்ணாதுரை தமிழகப் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதியுடன் பேசியபோது இத்தகவலைத் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

இதற்கிடையில் திரு. அண்ணாதுரை நேற்றும் இன்றும் ஜப்பான் வெளியுறவு மந்திரி திரு. மிக்கியைச் சந்தித்துப் பேசியதாக டோக்கியோவிலிருந்து கிடைத்த செய்திகள் கூறின.

திரு. மிக்கி, இந்தியாவின்

(6-ம் பக்கம் பார்க்க)

---

## சிங்கள-தமிழ் நூல்களின் சமவிலை பிரேரணை

### செனட்டில் தோல்வி

கொழும்பு, செவ்வாய்

கல்வி இலாகாவினால் வெளியிடப்படும் பாடப்புத்தகங்களில் சிங்களப் புத்தகங்கள் விற்கப்படும் அதே விலையில் தமிழ்ப் பாடப் புத்தகங்களும் விற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கோரி, செனட்டர் டொமிக் டி சூசா செனட் சபையில் கொண்டுவந்த பிரேரணை தோல்வியடைந்தது.

இப்பிரேரணை நேற்றுக் கொண்டுவரப்பட்ட போது அதைச் செனட்டர் நடேசன் ஆமோதித்தார்.

விவாதத்தின் பின் இன்று பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, அது போதிய வாக்குகளைப் பெருமல் தோல்வியடைந்தது. பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் எம். திருச்செல்வத்தை தவிர வேறு தமிழ் செனட்டர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை. அமைச்சர் திருச்செல்வம் பிரேரணையை ஆதரித்தோ எதிர்த்தோ வாக்களிக்கவில்லை. அவர் வாக்களிக்க மறுத்துவிட்டார்.

---

## டாக்டர் 'சவுந்தரா' அப்பீல் தள்ளுபடி

### நீதிமன்றத்தில் அவரே நேரில் அரைமணிநேரம் வாதாடினர்

லண்டன், மே 7

இலங்கையைச் சேர்ந்த டாக்டர் எமில் சவுந்தரநாயகம் தமக்கு எதிராக பிரிட்டிஷ் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஆட்சேபித்துத் தாக்கல்செய்திருந்த அப்பீல் மனு இன்று உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிமன்றத்தில் தாமே நேரில் ஆஜராகித் தமது சார்பில் அரைமணி நேரம்வரை வாதாடினார்.

தம்மீது சுமத்தப்பட்ட மோசடிக் குற்றச்சாட்டும், அதை விசாரணைசெய்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பும் நீதியல்லவென்று டாக்டர் சவுந்தரநாயகம் வாதாடினார்.

விசாரணை முடிவில் அப்பீல் மனுவை நீதியரசர்கள் நிராகரித்துத் தீர்ப்பளித்தனர். இதன் பின் டாக்டர் சவுந்தரநாயகம் சிறைச்சாலைக்கு திருப்பிக்கொண்டு செல்லப்பட்டார்.

---

## மாணவ ஆசிரியராக நியமனம் பெறுவோரின் பெயர் பட்டியல்

### எம். பி.க்களிடம் உள்ளனவாம்

உடுவில், செவ்

1966-ம் ஆண்டு நடாத்தப்பட்ட மாணவ ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களது பெயர்விபரங்கள் அடங்கிய பட்டியல் அந்தந்தத் தொகுதி எம். பி. க்களிடம் உள்ளதாகத் தெரியவருகிறது.

ஒவ்வொரு பாராளுமன்ற தொகுதியிலும் 38 மாணவ ஆசிரியர்கள் நியமனம் பெறுவார்களென்றும் அறியப்படுகிறது. தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் நியமனம் வழங்கப்படுமாம்.

இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்விபரங்கள் இப்போது இறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளனவாம்.

மாணவ ஆசிரியர் நியமனத்தில் கூடிய தொகையினர் ஆங்கிலப்பாடத்துக்காக நியமிக்கப்படுவர். ஒவ்வொரு தொகுதியிலும் ஆங்கிலத்துக்கு 31பேர்களும், பொதுவாக மூவரும், விஞ்ஞானம் வர்த்தகம், விவசாயம், மனையியல் ஆகியவற்றுக்கு தலா ஒவ்வொருவரும் மாணவ ஆசிரியர்களாக நியமிக்கப் படவிருக்கின்றனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சட்டங்களை இயற்றுவோன் அல்லது தீர்ப்புகளை வழங்குவோனைக் காட்டிலும் பொதுமக்கள் உணர்ச்சியை உருவாக்குவோனுக்கு அதிகச் சிறப்பிடம் உண்டு. இவன்தான் சட்டங்களையும் தீர்ப்புகளையும், செயலில் நிறைவேற்றுவதைச் சாத்தியமாக்குகிருன் அல்லது சாத்தியமற்றதாக்குகிருன்.

— ஆபிரகாம்லிங்கன்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANAD...
Post Box: 41 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலகவருஷம் சித்திரைமாதம் 26ந் திகதி (8-5-68)

## திட்டஇணைப்பு செயலகம்

அரசாங்க இலாகாக்களின் திட்டவேலைகள் அனைத்தையும் இணைத்து ஒரு முகப்படுத்துவதற்கென தனியான ஒருசெயலகம் நிறுவப்படவேண்டுமென ஆளும்கட்சிக்குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. எப்பொழுறுதோ செய்திருக்கவேண்டிய இந்த வேலையை இப்பொழுதாவது செய்ய முன்வந்திருப்பது வரவேற்கவேண்டியது; பாராட்ட வேண்டியது.

பத்தாண்டுத் திட்டம், ஆறுண்டுத்திட்டம் குறுகிய ஒராண்டுத்திட்டமென எழுத்தளவிலும் பேச்சளவிலும் 'ஆண்டிகள்கூடி மடம் கட்டியது' போன்று திட்டங்கள் போடப்பட்டனவேயொழிய எந்தத்திட்டத்தையும் சரியாகச் செயல்படுத்தவில்லை. இலங்கையுடன் விடுதலையடைந்த இந்தியா ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து. பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையிலும் அவற்றை நிறைவேற்றி வந்திருக்கிறது. இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கென வெளிநாடுகளிலிருந்துபல வழிகளிலும் கிடைத்த உதவிகள் கூட சரியாகப் பயன்படுத்தப் படவில்லை. அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படாததற்கும் வெளிநாட்டு உதவிகள் சரியாகப் பயன்படுத்தப் படாததற்கும் திட்டங்களை உருவாக்கும் அரசாங்க இலாகாக்களுக்கிடையிலும் அவற்றைச் செயல்படுத்த வேண்டிய அரசாங்க இலாகாக்களுக்குமிடையில் இணைப்பு இல்லாததே முழுக்க முழுக்கக் காரணமென்று சொல்லலாம்; விவசாய அபிவிருத்தி திட்டங்கள் கூட உணவு விவசாய அமைச்சின் இலாகாக்களுக்கும், காணி, நீர்ப்பாசன அமைச்சின் இலாகாக்களுக்குமிடையில் இணைப்புஇல்லாமல் சரிவர நிறைவேறமுடியவில்லையானல் இதர திட்டங்களைப்பற்றிச் சொல்லவேண்டுமா?

ஒரு திட்டம் வகுத்தும் அதன் உத்தேச செலவு அதை நிறைவேற்றும் காலஎல்லை, அதனுல் ஏற்படக்கூடிய பயன் ஆகியவைபற்றி மதிப்பீடு எடுப்பதுடன் நந்தத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு எந்தெந்த அரசாங்க இலாகாக்களுடையது. அவை எந்த விதத்தில் இத்திட்டத்தை ஒரு முகப்படுத்தி குறுகிய காலத்தில் நிறைவேற்ற வேண்டுமென்பது பற்றியும் திட்டவட்டமாக முடிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம்.

அபிவிருத்தித்திட்டங்கள் பலவற்றைத் தயாரித்து அவற்றை நிறைவேற்றவேண்டியிருப்பதாலும் திட்டங்கள் எந்த அளவில் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதை அடிக்கடி கவனித்து சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கிடையில் இணைப்பு ஏற்படுத்தவும் பொதுவானஒருசெயலகம்அவசியம்தேவை இதைஅரசாங்கம் உணர்ந்துள்ளது. அபிவிருத்தித்திட்டங்கள் மீது நம்பிக்கை அளிப்பதாகும் தீர்மானத்தோடு நின்றுவிடாமல் அதைச் செயல்படுத்தி திட்டஅபிவிருத்தி இணைப்புச் செயலகத்தை விரைவில் அமைக்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுப்பது அவசியம்.

ஜெலீல் எனமல்

## கூட்டுறவுச் சங்க தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

நாட்டின் வேலையில்லாப் பிரச்னைதீர தொழிற்சாலையின் பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்றும், வடமாகாண கூட்டுறவுச் சங்கத்தில் தமது சங்கத்தை பதிவு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை யாழ்ப்பாணம் ஜெலீல் எனமல் கூட்டுறவுச் சங்கம் தனது 3-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றியது.

யாழ்ப்பாணம் எம். ஓ. லேன் தொழிற்சாலை மண்டபத்தில் சங்கக்கூட்டம் திரு. எம். கே. முகமது யூசுபு தலைமையில் நடைபெற்றது. திரு. எம். எம். ஜெனூன் சென்றகூட்ட அறிக்கையை வாசித்தார். இக்கூட்டத்தில் சங்கப் போஷகரான திரு. எம். எம். சுல்தான், கூட்டுறவுப் பரிசோதகர்களான திரு. கோவிந்தசாமி, திரு. எஸ். செல்லத்துரை, திரு. கே. தங்கநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் சங்கத்தின் முக்கியமுன்னேற்ற நோக்கங்களைச் செயல்படுத்தும் புதிய திட்டங்கள்பற்றி ஆராயப்பட்டது.

இத்தொழிற்சாலையின் பொருள்உற்பத்திக்கு முக்கிய காரணமாக இருந்த ஜனுப். கே எஸ். முகிதினுக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

சங்கக் காரியதரிசி திரு. ஜனுப் எம். எம். ஜெஸ்ன் நன்றியுரை கூறினர்.

[கி. நி]

## சங்கானையில் மின்தறி நிலையம்

சங்கானை, செவ்.

சங்கானையில் மின்தறிநிலையம்ஒன்றை அமைப்பதற்கான அங்கீகாரத்தை அரசாங்கம் வழங்கியுள்ளது. இந்தநிலையத்திற்குத் தேவையான இயந்திர உபகரணங்களை இறக்குமதிசெய்ய 6லட்சம் ரூபாய் அன்னியச் செலாவணி அனுமதிக்கப்பட்டுள்ளது.

சங்கானை வலி மேற்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திஞல் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்டே இம்மின்தறிநிலையம் சங்கானை பட்டினசபைக் காரியாலயத்திற்கு அருகாமையில் உள்ள நிலத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

சுமார் 150 பேர்களுக்கு வேலைவசதிகள் இத்திட்டத்தின்மூலம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் சுமார் மூன்றுமாதகாலத்தில் வேலைகள் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

# பேராதனை முருகனுக்கு கண்டியில் பெரும்வரவேற்பு

## இனமத பேதமற்று உள்ளங்கள் இணைந்தன

கண்டி, செவ்வாய்

பேராதனைப்பல்கலைக்கழக முருகன் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும் கணேஷ முருக விக்கிரகங்கள் மாத்தளையிலிருந்து ஊர்வலமாகக்கொண்டுவரப்பட்டு கட்டுக்காஸ்தோட்டைப் பாலத்தை வந்தடைந்தபோது மக்கள் இந்த விக்கிரகங்களைத் தரிசிப்பதற்காக பெருமளவில் திரண்டிருந்தனர்.

மின்சார விளக்குகளாலும் பூக்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தகணேஷமுருகவிக்கிரகங்களுக்கு கண்டி-திருக்கோணமலை வீதியில் மத்திய மாகாண இந்து மாமன்ற அங்கத்தவர்கள் பெரும் வரவேற்பளித்தனர் இதன்பின் கண்டி மாநகரின் சகல வீதிகள்வழியேயும்விக்கிரகங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன வீதிகள்தோறும் மாவிலை தோரணம் கட்டி மின்சார விளக்குகளால் அலங்கரித்து பூரணகும்பங்கள் வைத்து கணேஷ முருக விக்கிரகங்களுக்குப் பெரும் வரவேற்பளித்தனர்.

தமிழ் மக்கள் மட்டுமின்றி சிங்கள, முஸ்லிம் மக்களும் பட்டாசு கொழுத்தி பெருமகிழ்ச்சியுடன் வரவேற்பில் கலந்துகொண்டனர்.

## தூதுக்குழு சந்திக்கும்

யாழ்ப்பாணம், புதன்

அச்சுவேலி தோப்பு அருள்நந்தி பாடசாலையில்இரண்டு ஆசிரியர்கள் மட்டும் கல்வி கற்பிக்கிருர்களாம். கடந்த ஆண்டில் இங்கு நான்கு ஆசிரியர்கள் கடமையாற்றியபோதும் இருவர் இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லையாம்.

இதனுல் இங்கு ஆங்கிலம், தையல்பாடங்கள் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாததால் இதுபற்றி மேற்படி கல்லூரி பெற்ருேர்களைக் கொண்ட தூதுக்குழுவொன்றுகோப்பாய் எம்.பியையும், கல்வி அதிகாரிகளையும் சந்தித்து நிலைமையை எடுத்துக்கூற விருக்கின்றது.

[கா. நி]

## முருகன் பவனி

அநுராதபுரம், செவ்.

பேராதனை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும்வள்ளி தெய்வானை சமேத முருக விக்கிரகங்கள் அநுராதபுரத்துக்கு கொண்டுவரப்பட்ட பொழுது இங்குள்ள மக்கள் பூரண கும்பங்கள் வைத்து வரவேற்றனர். அநுராதபுரம் புதிய நகரில் கதிரேசன் கோவிலில் இரவு விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருந்தபோது பல்லாயிரக்கணக்கான அடியார்கள் சென்று தரிசித்தனர். ஆலயத்தில் விசேஷ பூஜைகள் நடத்தப்பட்டன.

### இன்றைய பலன்

[8 - 5 - 68]

சித்திரை மீ 26 உ

புதன்கிழமை

திதி- ஏகாதசி.

நட்சத்திரம்- பூரம் பகல்9-27 மேல் உத்தரம்

ராகுகாலம்- 11-55—1-25.

சுபநேரம்- 4-25—5-55.

இன்று பிறந்தவர்களுக்கு— ஒளிமயமான ஆண்டு. உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரிக்கும். எதிர்பாராத அதிர்ஷ்டங்களுக்கும் இடமுண்டு முதியவர் ஒருவர் தக்க தருணத்தில் கைகொடுத்துதவ முன்வருவார்.

மேஷம்- நம்ப நட, நம்பி நடக்காதே.

ரிஷபம்- தந்தையின் ஆதரவு, தனமும் சேரும்.

மிதுனம்- மேலான எண்ணம், பெரியஇடத்து ஆதரவு.

கடகம்- மக்கள் புகழ், மகிழ்ச்சிப் பெருக்கு.

சிம்மம்- தொழில்துறையில் பகைவர், அமைதி நன்று.

கன்னி-கோபப்பார்வை கொள்கையில் கோணல்.

துலாம்- மனைவாழ்வில் மலர்ச்சி, மனதில் ஆனந்தம்.

விருச்சிகம்- தடைகள் தாக்கும், தாமதமிகுதி.

தனுசு- வாகன நலன், வாழ்விலும் திருப்பம்

மகரம்- போதுமென்ற மனம்- பொன்னுன வாழ்வு.

கும்பம்- ஆயுத பயம், அவசரம் வேண்டாம்.

மீனம்- இல்லறம் இனிக்கும், இணைப்பும் இறுகும்.

## 'பொலிசாருக்கு உரிமையில்லையா?'

### பட்டினசபைத் தலைவர் கேட்கிருர்

சங்கானை, புதன்

"பொலிசாரும் தொழிலாளவர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. ஏனையதொழில்முறைகளில் ஈடுபட்டுள்ளோர் தொழிற் சங்கம் அமைத்துத் தமது உரிமைகளுக்காகப் போராடுவது நியாயம் என்ருல் அந்த உரிமை ஏன் பொலிசாருக்கு இருக்கக் கூடாது?"

இவ்வாறு சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் சங்கானை அரசடி வயிரவர் ஆலய முன்றலில் நடைபெற்ற மேதின விழாவில் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா வலி. மேற்குக் கூட்டுறவு ஊழியர்களால் நடாத்தப்பட்டது. ஆசிரியர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில், கூட்டுறவு இயக்கத்தின் நேர்மை அவசியம். நேர்மையற்ற கள்ள வியாபாரம்போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் எவரும் தண்டிக்கப்படவேண்டும்" என்ருர்.

மூன்னுள்ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் திரு. சி. சுப்பிரமணியம், அகில இலங்கைக் கூட்டுறவு பரிசோதக சங்கத்தலைவர் திரு. எம். கந்தையா அகில இலங்கை உப்பள தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. கே. இராசேந்திரா உட்படப்பலர் பேசினர்.

## நாட்டிலும் நகரிலும்

சென்ற மாதம் கோப்பாய் மகளிர் ஆசிரியபயிற்சி கல்லூரியில் நடந்த அகில இலங்கை தமிழ் இசையாசிரியர் மாநாடு நிறைவேற்றிய சில தீர்மானங்கள் பாராட்டுக்கும் வரவேற்புக்குமுரியன.

மாநாடுகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் பல வாய்ப்பேச்சோடும் கையெழுத்தோடும் நின்றுவிடுவது நம்மூர்வழக்கம். கூட்டத்தில் சொற்பொழிவுகள் ஆற்றி காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் நடத்தும்போது எழும் உற்சாகம் கூட்டம் முடிந்த பின்பு சிறிது சிறிதாக மங்கிப்போய் விடுவதுண்டு.

ஒருதீர்மானம் நிறைவேற்றப்பட்டபின் அதை செயல்படுத்தும் பொறுப்பு அநேகமாக காரியதரிசியையே சார்ந்தது. எந்த சங்கமாயிருந்தாலும் அதன் காரியதரிசியின் சுறுசுறுப்பிலும் கெட்டித்தனத்திலுமே சங்கத்தின் வெற்றி தங்கியிருக்கிறது.

தமிழ் இசையாசிரியர் சங்கமும் தான் நிறைவேற்றிய தீர்மானங்களை காற்றில் பறக்கவிட்டு இருக்காமல் அவற்றை ஊக்கமாக செயல்படுத்தும் என்று எதிர்பார்க்கிறேன்.

இசை சம்பந்தமான கட்டுரைகள், கதைகள், துணுக்குகள் அடங்கிய ஒரு சஞ்சிகையை வெளியிடுவது பாடசாலைகளுக்கிடையே தலைக்கொரு தடவையாவது இசைக் கதம்ப நிகழ்ச்சிகளை நடத்துவது, சங்கப்பொறுப்பில் ஒரு நிரந்தரமான வாத்தியக் கோஷ்டியை அமைப்பது பிரதேசவாரியாக பெருமளவில் இசை விழாக்கள் நடாத்துவது, இப்படி அவர்கள் நிறைவேற்றிய தீர்மானங்களை நோக்கும்போது இலங்கையில் தமிழிசையின் வருங்காலம் பிரகாசமாய் விளங்கப் போகிறதென்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு இசையாசிரியர்களை மருந்துக்குகூட கண்டுபிடிக்கமுடியாது. அப்பொழுது மக்கள் இசையில் அக்கறை காட்டவில்லை. பதிலுக்குச் சிலர் அதுதாழ்வான தொழில் என்று வெறுக்கவும் செய்தனர்.

இன்று அந்த நிலைமைதுப் பரவாக மாறிவிட்டது, இசையை விரும்பி கற்போரின் தொகை நாளுக்குநாள் அதிகரிக்கின்றது இசைவிழாக்களும் இசைக்கருத்தரங்குகளும் நாடெங்கும் நடைபெறுகின்றன. இசைச் சங்கங்களும் கழகங்களும் புதிதுபுதிதாக தோன்றுகின்றன இலங்கை மக்களிடையே இசையுணர்ச்சி பெருகி வருகிறது.

இப்படியெல்லாம் இருந்தும் நமது சிங்களச் சகோதரர்கள் ஒரு சில ஆண்டுகளுக்குள் இசை, நாடகம், சினிமா முதலிய துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றத்துடன் ஒப்பிடும்போது தமிழ்க்கலை வளர்ச்சி இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டியிருக்கிறதென்றே கவலையுடன் கூற வேண்டியிருக்கிறது.

இந்தக் குறையை தமிழ் இசை ஆசிரியர் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் நிவர்த்தி செய்ய முற்பட வேண்டும். பொது மக்களும் அரசாங்கமும், பெற்ருேர் ஆசிரிய சங்கங்களும் அவற்றிற்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்க வேண்டும்.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிஸில் வியட்னும் பூர்வாங்கப் பேச்சுக்கள் நடத்தும் இடம்பற்றி இணக்கம்

## அமெரிக்கா, வட வியட்னும் இரண்டும் தெரிவித்தன

பாரிஸ், மே 7

**வியட்னும் பூர்வாங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளை எந்த இடத்தில் வைத்துக்கொள்வது என்பது பற்றி வடவியட்னுமும் அமெரிக்காவும் இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

மத்திய பாரிஸில், முன்லேயே, வடவியட்னும், ஹை யூனெஸ்கோ தலைமைக் அமெரிக்கப் பிரதிநிதிகள் காரியாலயமாகவிருந்தசர்வ அடுத்த வெள்ளிக்கிழமை தேச மாநாட்டு நிலையத்தி சந்திக்கவிருக்கிருர்கள்.

### 'வியட்கொங் தாக்குதல் ஊக்கமூட்டும் சூழ்நிலையல்ல'

### ஜோன்ஸன் கருத்து

வாஷிங்டன், மே 7

நேற்று, அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சன், பாரிஸ் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லும் அமெரிக்க தூதுகோஷ்டி சம்பந்தமாகத் தமது பிரதான வியட்னும் ஆலோசகர்களுடன் கலந்தாலோசனை நடத்தினுர். இச்சந்திப்பின்போது, அமெரிக்கத் தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்கிச்செல்லும் திரு. அவெரில் ஹரிமனும் சமுகமளித்திருந்தார்.



பாரிஸ் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கும் சந்தர்ப்பத்தில், தென்வியட்னுமில் வியட்கொங்கினர் தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதல்கள், பேச்சுவார்த்தைகளுக்கு ஊக்கமூட்டும் சூழ்நிலையாக அமையவில்லை என ஜனுதிபதி ஜோன்சன் கருத்துத்தெரிவித்ததாக வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

### தென் வியட்னுமில் கடும் சண்டை

சைகோன், மே 7

தென்வியட்னுமில், அதன் தலைநகரான சைகோனிலும் சுற்றுப்புறங்களிலும் சண்டை, நேற்று மூன்ருவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது. நேற்றுப் பல இடங்களில் வியட்கொங்கியர் ரோக்கெட், மோட்டார் இயந்திரத்துப்பாக்கிகள்கொண்டு கடுமையாகத் தாக்கினர்.

தென்வியட்னுமில், சனநெருக்கடி நிறைந்த பகுதியொன்றிலும், நேற்று வியட்கொங்கியர் தாக்குதல் நடத்தினர்.

சைகோனில், கடுமையான ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிரதான சிவிலியன் விமான நிலையமும் போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளது.

### மற்றுமொரு பத்திரிகை நிருபர் கொல்லப்பட்டார்

நேற்றைய சண்டையில், மற்றுமொரு பத்திரிகை நிருபர் கொல்லப்பட்டார். நேற்று முன்தினம், நான்கு பத்திரிகை நிருபர்கள்கொல்லப்பட்டனர்.

சர்வதேசப் பத்திரிகை டிரஸ்ட் ஸ்தாபனம் பத்திரிகை நிருபர்களின் போர் சுடுபாடற்ற நிலையை அங்கீகரிக்குமாறு எல்லா நாடுகளையும் வேண்டிக்கொண்டுள்ளது.

நேற்று நடைபெற்ற சண்டையில் 177 வியட்கொங்கியர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன், சைகோனிலிருந்து சுமார் 10 மைல் தூரத்திலுள்ள இடத்தில் அமெரிக்கத் துருப்புகள், 200 வியட்கொங்கியரைக் கொன்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்றைய சண்டையில், 300 அமெரிக்க, தென்வியட்னும் துருப்புகளை வியட்கொங்கியர் அழித்துவிட்டதாக ஹனேய் ரேடியோ அறிவித்தது.

#### இன்னும் 10 நாள்

வியட்கொங்கியரிடமிருந்து கைப்பற்றப்பட்ட இ[illegible] தஸ்தாவேஜுகள், தற்போதைய வியட்கொங் தாக்குதல்கள் இன்னும் பத்து நாட்களுக்குத் தொடர்ந்து நடத்தப்படுமெனத் தெரிவிப்பதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

---

### நைஜீரியப் பிரச்னை லண்டனில் பேச்சுவார்த்தை

லண்டன், மே. 7

லண்டனில் சமஷ்டு நைஜீரியாவிற்கும் பிரிந்து சென்றுள்ளகிழக்கு நைஜீரியாவான 'பியாவிரசவுக்கு மிடையே நேற்றுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தன

இப் பேச்சுவார்த்தைகள் சுமார் 2 மணிநேரம் நீடித்தது.

---



### ஜப்பானில் அண்ணு

டோக்கியோ. மே.7

தற்போது ஜப்பானில் விஜயம் செய்யும் தமிழக முதல்மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை ஜப்பானியப் பிரதமர் திரு சாட்டோவைச் சந்தித்துப் பேசியிருக்கிருர்.

நேற்றுத் திரு. அண்ணுதுரை பல கண்காட்சிச்சாலைகளையும் பண்ணைகளையும் சுற்றிப் பார்வையிட்டார்.

வியாழக்கிழமையன்று, திரு அண்ணுதுரை ஜப்பானின் பண்டைய நகரான கியோட்டோவுக்குப் புறப்பட்டுச் செல்வார்.

---

### கி.பாகிஸ்தானில் படகு விபத்து

டாக்கா, மே7

கிழக்கு பாகிஸ்தானிலுள்ள ஓர் ஆற்றில் நேற்றுஓர் இயந்திரப்படகும் மறறுமொரு படகும் மோதிக்கொண்டதன் விளைவாக, இயந்திரப் படகு நீரில்மூழ்கிவிட்டது.

இப்படகில் மொத்தம் 175 பிரயாணிகள் இருந்தனர் முதலில், 100 பேர் நீந்திக்கரைசேர்ந்தனர் அல்லது மீட்கப்பட்டனர் என்றும், 67 பேர் இறந்துவிட்டதாக அஞ்சுவதாகவும் செய்திகள் தெரிவித்தன.

ஆனல், கடைசியாகக்கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து கிடைத்துள்ள செய்திகள், படகு விபத்தில் எவருமே உயிரிழக்கவில்லையென்றும், எல்லோருமே மீட்கப்பட்டுவிட்டதாகவும் கிழக்கு பாகிஸ்தான் கவர்னர் அறிவித்துள்ளதாகக் [illegible]

---

### சிறுநீரக மாற்றுப் பொருத்தம்

வெனிசூலா, மே-7

வெனிசூலாவில் ஓர் ஆஸ்பத்திரியில் இரண்டுசிறுநீரக மாற்றுப், பொருத்தங்களை டாக்டர்கள் சாதித்துள்ளனர்.

சிறுநீரகங்களை நன்கொடை அளித்தவர் ஆஸ்பத்திரியில் மரணமான 21 வயதான பெண்ணுகும். இப் பெண்ணின் பெற்ருேரும் இம்மாற்றுப் பொருத்தங்களை நடத்துவதற்கு டாக்டர்களுக்கு அனுமதி அளித்தனர்'

இந்த இரு சிறுநீரகங்களும் இரண்டு சட்டக் கல்லூரி மாணவர்களுக்குப் பொருத்தப்பட்டன: இருவ[illegible] டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

---

# ஜோர்தான் - இஸ்ரேல் துருப்புகள் மோதின

## இஸ்ரேல் போர் வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்

அம்மான், மே. 7

நேற்று, இஸ்ரேல்துருப்புகளும் ஜோர்தான் துருப்புகளும் மீண்டும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜோர்தான் துருப்புகளே, ஜோர்தான் ஆற்றின் கிழக்குப்பக்கக் கரையில், இஸ்ரேல் துருப்புகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக டெல் அவிவ் வட்டாரங்கள் தெரிவித்தன. எவ்வித ஆட்சேதமும் இல்லையெனவும் அவை தெரிவித்தன.

அம்மானிலிருந்து கிடைக்கும் செய்திகள், இஸ்ரேல் துருப்புகளே முதலில் சுட்டதாகவும், தொடர்ந்து சண்டையில், ஒரு இஸ்ரேல் போர் வீரர்கொல்லப்பட்டதாகவும் கூறுகின்றன.

### ஐ. நா. பந்தோபஸ்து சபையில் ஜெருசல நிலைமை விவாதம்

### இஸ்ரேல் நடவடிக்கைக்கு ரஷ்யா கண்டனம்

நியூயோர்க், மே 7

ஐ. நா. பந்தோபஸ்துசபை நேற்றுக்கூடி, ஜெருசல நிலைமை பற்றி விவாதித்தது.

ஐ. நா. பந்தோபஸ்துசபையின்வேண்டுகோளையும்மீறி, ஜெருசலத்தில் இஸ்ரேல் தனது சுதந்திரதின இராணுவஅணிவகுப்பை நடத்தியுள்ளதைரஷ்யப் பிரதிநிதி, திரு. ஜேக்கப்மாலிக் கண்டித்தார்.

ஹிட்லரின் நடவடிக்கை போன்ற இஸ்ரேலின் இந் நடவடிக்கை, மேற்கு ஆசிய நிலைமையை மேலும் மோசமாக்குமென அவர் எச்சரித்தார்.

பாகிஸ்தான் பிரதிநிதி, ஜெருசலத்திலுள்ள அரபுச் சொத்துக்களை இஸ்ரேல் அளித்துள்ளதாகக் குற்றஞ் சாட்டினர்.

### ஐ. அ கு. — சிரியா ஜனதிபதிகள் சந்திப்பு

கெயிரோ, மே7

சிரியா ஜனுதிபதி டாக்டர் அல்அட்டாஸி, கெயிரோ வந்து சேர்ந்துள்ளார்.

மேற்கு ஆசிய நிலைமை பற்றி, ஐக்கிய அரபுக்குடியரசு ஜனுதிபதி நாஸருடன் அவர்விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து அரபுநாடுகள் உருவாக்க வேண்டிய திட்டங்கள்பற்றி அவர். நாஸருடன் கலந்தலோசிப்பார்.

---

# இன ஒதுக்கலை எதிர்த்து போராட்டம்

## ஐ. நா. விடமிருந்து பிரிட்டன் உதவி கோருகிறது

டெஹரான், மே 7

தனது நாட்டில் இனஒதுக்கலை எதிர்த்துப்போராட உதவுமாறு பிரிட்டன்ஐ. நா. ஸ்தாபனத்தைக் கேட்டுள்ளது.

டெஹரானில் நடைபெறும் மனித உரிமைகள் மாநாட்டில், பிரிட்டிஷ் பிரதிநிதிஇவ்வேண்டுகோளை விடுத்தார்.

இன ஒதுக்கலை எதிர்த்து பிரிட்டனில் இயங்கும்ஸ்தாபனங்கள், இயக்கங்களுக்கு ஐ. நா. உதவியளிக்கவேண்டுமென்று அவர் கோரினுர்.

அவரது கோரிக்கைக்கு டென்மார்க், பின்லாந்து, ஜமேக்கா ஆகிய நாடுகள் ஆதரவு அளித்தன.

பிரிட்டனின் இந்தஆலோசனையைப்பல ஆபிரிக்கநாடுகள் எதிர்த்தன, தான்ஸானியாப் பிரதிநிதி, பிரிட்டன் மீது இன ஒதுக்கல் குற்றத்தைச் சுமத்தினுர்.

---

பழைய

## பிரெஞ்சு சோமாலிலாந்து ஜனதிபதி மீது முயற்சி

அடிஸ்அபாபா, மே 7

முன்னர் பிரெஞ்சு சோமாலிலாந்து என தெரியப்பட்ட பிரதேசத்தின் ஜனுதிபதியான அலிஆசிவ்மீது கொலை முயற்சி ஒன்று நடைபெற்றுள்ளது.

அவர் காரில் சென்றுகொண்டிருக்கையில், துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது. தெய்வாதீனமாக, ஜனுதிபதி ஆசிவ், சிறுகாயங்களுடன் தப்பிவிட்டார்.

அவரதுகாரச்சாரதிகொல்லப்பட்டார்.

### தெ.மே.ஆபிரிக்கா

நியூயோர்க், மே.7

தென் மேற்கு ஆபிரிக்கா மீது நேற்று ஐ. நா, பொதுச் சபையில்நடைபெற்ற விவாதத்தின்போது சட்ட விரோதமாகத் தென்மேற்கு ஆபிரிக்கா மீது அதிகாரம் செலுத்தும் தென்னுபிரிக்கா மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ரஷ்யாவும் ஆபிரிக்க நாடுகளும் சபையை வலியுறுத்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “முன்னேற்றத்துக்கு சமய வழிபாடு அவசியம்”

— ஸ்ரீகாந்தா

குரும்பசிட்டி, செவ்

“தற்கால வாலிபர்களின் மனதில் அஞ்ஞானம் குடிகொண்டுள்ளது. இதனால் தான் உரிமைகளைக் கேட்பதில் மக்கள் கவனம் செலுத்துகின்றார்களே ஒழிய தமது கடமைகளைச் செய்ய தவறுகின்றனர். மக்கள் ஸ்திரமாக முன்னேற சமய வழிபாடு அவசியமாகும். காலஞ் சென்ற டி. எஸ். சேனநாயக்கா இதனை நன்கு உணர்ந்து அரசாங்க குடியேற்றத் திட்டங்களில் ஆலயங்கள் நிறுவி வழிபாடு வசதிகளை வாலிபர்களுக்கு செய்து கொடுத்துள்ளார். இங்குள்ள வாலிபர்கள் தெய்வ வழிபாட்டில் தமது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்.”

கிளிநொச்சி விசுவமடு வாலிபர் குடியேற்றத் திட்டத்தில் நிறுவப்படவிருக்கும் விநாயகர் ஆலயத்துக்கான அத்திபாரக்கல்லை நாட்டி வைத்துப் பேசும் போது காணி, நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிளி நாச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் “வாலிபர்கள் தமது குறைபாடுகளை எந்தக் கட்டத்தில் எடுத்துக் கூறினாலும் தீர்த்து வைக்க உதவி புரிவேன். கஷ்டங்கள், குறைகளைப் போக்க இடைத்தரகர்களிடம் சென்று அவர்கள் வலையில் சிக்கிக் கொண்டு அடிமைகளாகி விடக் கூடாது.” எனக் கூறினர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பேசியதாவது;— இக்குடியேற்றத் திட்டத்திற்கு பலரின் ஆலோசனையின் பேரால் புதிய பெயராக “சிவயோக நகர்” எனப் பெயரிடப் பட்டுள்ளது. வாலிபர்கள் விவசாயம், கடவுள் பக்தி போன்றவற்றில் ஊக்கம் செலுத்தி வெகு விரைவில் குடியேற்றத் திட்டத்தைப் பட்டினமாக மிளிரச் செய்தல் வேண்டும்.

# குருநகர் மீனவர் வீடுகளுக்கு அதிக வாடகை வசூலிக்கிறார்களாம்

யாழ்ப்பாணம், புதன்

“குருநகர் வீடமைப்புத் திட்டத்தைப் போன்று மன்னார், சிலாபம் அராலி போன்ற இடங்களிலும் வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் அரசாங்கம் இவ்வீடமைப்புத் திட்ட குடியிருப்பாளரிடம் எவ்வளவு வாடகைப் பணத்தை வசூல் செய்ததோ அதே தொகையையே இலங்கையின் ஏனைய வீடமைப்புத் திட்டங்களில் இப்பொழுதும் வசூலித்துக் கொண்டிருக்கையில் யாழ்ப்பாணத்தில் குருநகர் வீடமைப்புத் திட்டத்தில் மட்டும் ஏழை மீனவர்களிடம் அதிகபணம் வாடகையாக வசூலிப்பது அநியாயமான செயலாகும்.”

மாநகரசபைக்குச் சொந்தமான குருநகர் வீடமைப்புத் திட்டத்தில் சமீபகாலத்திலிருந்து அதிகளவு வாடகைப் பணம் வசூலிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக குருநகர் கலைக்கழகம் நடாத்திய கூட்டத்தில் திரு. யு. அ. செல்வநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புறக்டர் திரு. ஏ. அன்ரனி தலைமையில் குருநகர் சனசமூக நிலைய முன்றலில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு ஏ. அன்ரனி தனது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:— ஆரம்பத்தில் குருநகர் வீடமைப்புத் திட்டத்தில் 2 ரூபா 50சதமே வீடொன்றுக்கு வாடகைப் பணமாக இருந்தது. இத்தொகை படிப்படியாக அதிகரித்துள்ளது. 20ரூபாவும் அதற்கும் மேலாக இப்பொழுது யாழ். மாநகர சபையால் வாடகை அறவிடப்படுகிறது. ஏழை மீனவர்களிடம் இவ்விதம் வசூலிப்பதை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.” மற்றும் பலரும் பேசினர்.

(வி. நி.)

## புகையிலை அழிக்கப்பட்டதாம்

புன்னாலைக்கட்டுவன், செவ்

ஊரெழுவிலுள்ள தோட்டமொன்றில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புகையிலைக் கன்றுகள் அழிக்கப்பட்டுவிட்டதாகச் சுன்னாகம் பொலிசில் முறையிடப்பட்டுள்ளது. பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

# “புதிய திருப்பம் ஏற்பட வேண்டும்”

குரும்பசிட்டி, செவ்

“தமிழ்ப் பெண்மணிகள் மேற்குத்தேச நாகரீக கொள்கைகளுக்கு அடிமைப்பட்டு தங்களுக்கு உரிய ஆடவர்கள் மாதாந்த சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களாக இருக்க வேண்டும் என்ற மனப்பான்மை மாறவேண்டும்.”

ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரைநிகழ்த்துகையில் உதவிஅரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

தேக ஆரோக்கியம் பொருந்திய, பக்திநிறைந்த விவசாயிகளை வாழ்க்கைத் துணைவர்களாக எடுத்து பெண்மணிகள் மணம்செய்தல்வேண்டும். இவ்வகையில் புதிய திருப்பம் ஏற்படும் போது இந் நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார பற்றுக்குறை கபோன்றவற்றுக்கு தீர்வு காணப்படும்” என்றுமேலும் அவர் தெரிவித்தார்.

## ஊர்காவற்றுறையில் மே தினவிழா

ஊர்காவற்றுறை, செவ்

ஊர்காவற்றுறையில் இதுகாலவரையிலும் இல்லாதபடி, மதவேறுபாடின்றி மேதினம் கொண்டாடப் பட்டது. ஊர்வலத்துடன் ஆரம்பமான இம்மேதின விழாவில் சலவைத் தொழில், கடற்றொழில், சீவல்தொழில் முதலிய காட்சிகள் இடம்பெற்றன.

## சோவியத் படக்காட்சி

குரும்பசிட்டி, செவ்

சோவியத்ஸ்தானிகராலய தகவல் பகுதியினரின் கலைப்படக்காட்சி சனிக்கிழமை குரும்பசிட்டி கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் லங்கா—சோவியத் நட்புறவுச் சங்க யாழ் மாவட்டக் கிளை ஆதரவில் நடாத்தப்பட்டது.

## பதில் அதிபர்

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி, பரமேஸ்வராக்கல்லூரி அதிபரான திரு. சிவபாதசுந்தரம்வைத்தீஸ்வர வித்தியாலய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பரமேஸ்வராக் கல்லூரி உதவி அதிபராகக் கடமையாற்றிய திரு. எம். ஞானப்பிரகாசம் பதில் அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

(கா. நி.)

## ‘அக்கறை செலுத்தினால் லாபம்பெறலாம்’

வல்வெட்டித்துறை, செவ்

“விவசாயத்தில் ஊக்கமுள்ளவர்களாகக் காணப்பட்டுவரும் இப்பகுதி மக்கள் தங்களின் முயற்சிக்கு போதிய இலாபத்தை இன்னும் காணவில்லை. வெங்காயம், உப உணவுப் பொருள் அபிவிருத்தியில் இன்னும் கூடிய அக்கறை செலுத்தி வருவீர்களானால் அதிக இலாபத்தைப் பெறுவீர்கள்” என்று யாழ்—மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. என. ஜெயசீலன் கெருடாவிலில் வெங்காயச் செய்கை அபிவிருத்திபற்றி நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. இ. சிவஞானசுந்தரம்ஐயர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிருஷிகப் போதனாசிரியர் ரி. விமலேந்திரன். விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் ஏ. கனகசிங்கம், செ. ஜெகநாதன் ஆகியோரும் பேசினர்.

## நியமனம்

உடுப்பிட்டி, செவ்

யாழ். இலக்கிய வட்டத்தின் இணைச் செயலாளரும் ‘சுதந்திர ஒலி’ ஆசிரியருமான திரு. நா. சண்முகநாதனை [யாழ்வாணன்] நெல்லியடிப் பட்டினசபையின் பொதுசன நூலகக் கமிட்டி உறுப்பினராக நெல்லியடிப் பட்டின விசேட ஆணையாளர் திரு. சு. முருகவேள் நியமனம் செய்துள்ளார்.

## இட நெருக்கடி

குரும்பசிட்டி, செவ்

பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விடுதி மாணவர்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாவதாக மாணவர்கள் புகார் தெரிவிக்கின்றனர். மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளபோதிலும் போதிய விடுதிகள் ஒதுக்கப்படவில்லையாம்.

## ‘பாஷையூர் கட்டணத்தை குறைக்குக’

யாழ்ப்பாணம். புதன்

யாழ்ப்பாணம் பெரிய கடையிலிருந்து இரண்டரை மைலிலுள்ள கச்சேரிக்கு இலங்கைப் போக்கு வரத்துச்சபை பத்துச் சதமே கட்டணமாக அறவிடுகிறது. ஆனால் அதே இடைவெளியுள்ள பாஷையூருக்குச் செல்பவரிடம் 20 சதம் அறவிடப்படுகிறது. அதுமட்டுமன்றிபாஷையூரைத் தாண்டி அப்பால் ஒன்றரை மைல் தொலைவிலுள்ள கொழும்புத்துறைக்குச் செல்பவரிடமும் 20 சதமே அறவிடுகிறது. இதனைப் பரிசீலனை செய்து இக்கட்டணத்தைக் குறைக்க வேண்டும்”

இவ்வாறு கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற பாஷையூர் சனசமூக நிலைய 5-ம் ஆண்டு விழாவில் காரியதரிசி ஆ. மாட்டின் தெரிவித்தார். [நி]

## அம்பலாங்கொடை எம். பி. அபிப்பிராயம்

அம்பலாங்கொடை, செவ்.

‘இந்த நாட்டில் பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாப்பது ஆட்சி செலுத்தும் அரசாங்கத்தின் கடமை’ என அம்பலாங்கொடை எம். பி. டாக்டர் எம். ஏச். சத்தசேன பலப்பிட்டியாவில் நடைபெற்ற ஆலய வைபவம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் சத்தசேன மேலும் பேசுகையில் இந்த நாட்டில் பௌத்தமதத்தை பௌத்த சங்கமே பேணிக்காத்து வந்துள்ளது எனத் தெரிவித்த அவர் எவ்வளவோ கஷ்டங்களுக்கூடாக சங்கம் பௌத்த மதத்தை பாதுகாத்து வந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

## சிங்கள மன்னர் ஆட்சிபற்றிதேரோ

திருக்கோணமலை, செவ்.

‘சிங்கள மன்னர்கள் ஆட்சிக்காலத்தின் போது திருக்கோணமலை உட்பட கிழக்கு மாகாணம் முழுவதும் சிங்கள மன்னர்களாலேயே ஆளப்பட்டு வந்தது’ என திருக்கோணமலை மாவட்ட சாசனரக்ஷக பால மண்டலக் காரியதரிசி வண. பலபிட்டிய சாந்ததேரோ இங்கு நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் மாவட்டசபைமசோதா அமுல் நடத்தப்பட்டால் சிங்கள மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் கூறினர்.

# அகில இலங்கை தமிழ் இசையாசிரியர் மாநாடு

யாழ்ப்பாணம், புதன்

சென்ற மாதம்கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் அகில இலங்கைத் தமிழிசையாசிரியர் மாநாடு இசை வித்தியாதரிசினி திருமதி சரஸ்வதி வேலாயுதபிள்ளையின் தலைமையில் ஆறு நாட்களாக நடைபெற்றது.

இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்த சுமார் 200 இசையாசிரியர்கள் [பெண்கள் உட்பட] இதில் கலந்து கொண்டனர். வடபெரும்பாக வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் மாநாட்டைத் திறந்து வைத்தார்.

இசை சம்பந்தமாகவும் இசையாசிரியர் சம்பந்தமாகவும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1968-ம் ஆண்டுக்கு புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது:—

போஷகர்; வட பெரும்பாக வித்தியாதிபதி, உபபோஷகர்; இசைவித்தியாதரிசினி தலைவர்: ஆ. நமசிவாயம், உபதலைவர்; திருமதி தேவி பத்மநாதன், கௌரவ காரியதரிசி: பி. சந்திரசேகரம், உபகாரியதரிசி: ஏ. சோமசுந்தரம், கௌரவதனாதிகாரி- செ. பாலசுப்பிரமணியம், உபதனாதிகாரி; வி. சோமசுந்தரம்.

பதினொரு நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## 35 பேர் விசாரிக்கப்படுவர்

குரும்பசிட்டி, செவ்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 8-ம் திகதி சங்கானை குமரேசனின்பிரேதஊர்வல துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக 16 பேர் மீது 14 குற்றச்சாட்டுக்கள் சுமத்தித் தொடரப்பட்டுள்ள வழக்கில் சுமார் 35 சாட்சிகள் விசாரிக்கப் படவிருக்கின்றனர்.

மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் சங்கானைப் பொலிஸார் தொடர்ந்துள்ள இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டு இம்மாதம் 20-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தலா 1000 ரூபா பிணையில் ஏற்கனவே செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் எதிரிகள் தரப்பில் ஆஜராகியிருந்தார்.

## தற்கொலைகளை தடுக்க ஒரு யோசனை

யாழ்ப்பாணம், புதன்

“தினமும் பல உயிர்களை அழித்துவரும் ‘பொலிடோல்’ கடைகளில்விற்பனை செய்வதை அரசாங்கம் தடைசெய்ய வேண்டும். இல்லாவிட்டால் பல இளம் வாலிபர்களும் யுவதிகளும் தினமும் இதற்குப் பலியாகிக்கொண்டே இருப்பார்கள்.”

இவ்வாறு மானிப்பாயில் நடைபெற்ற மரண விசாரணை ஒன்றின் பின்னர் மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராஜா தெரிவித்தார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவனான சிவராஜா வைத்தியநாதன் என்ற 17 வயது மாணவன் நச்சுத்திராவகம் அருந்தி மரணமானது சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையில் இறந்த இளைஞன் எழுதிவைத்த கடிதம் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. தனக்கு வாழ்க்கையில் வெறுப்பேற்பட்டதால் தான் மரணமடைவதாக அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்ததாம்.

டாக்டர் வாரிட்சனும் சாட்சியமளித்த பின்னர் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [கா. நி.]

## ஆசிரியர் வரவில்லை

பூநகரி. செவ்.

பூநகரி - மட்டுவில்நாடு மகேஸ்வரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இரு நாட்களாக ஆசிரியர்கள் எவருமே பாடசாலைக்கு வராதபடியால் பாடசாலை இயங்கவில்லை. இது பற்றி நடவடிக்கை எடுக்கும்படி மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி நடராசா சரஸ்வதி கல்விப் பகுதிக்கு புகார் செய்துள்ளார்.

## 21 வலைகள் அகப்பட்டன

யாழ்ப்பாணம், புதன்

காக்கைதீவு மடத்திலிருந்து 21 மீன்பிடி வலைகள் கைப்பற்றப்பட்டன். இரகசியத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து மீன்பிடி இலாகாப் பரிசோதகர் திரு. பி. இராமநாதன் ஆனைக்கோட்டை பொலிஸாரின் உதவியுடன் காக்கைதீவுக்குச் சென்று சோதனையிட்ட போது மடத்திலிருந்து 21 வலைகள் அகப்பட்டனவாம். நவாலியைச் சேர்ந்தவைகளெனக் கருதப்படும் இந்த வலைகளுடன் சந்தேகத்தின் மீது ஒருவர் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப் பட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## வேலை விளம்பரம்

பல்லவராயன் கட்டுக் கிராமசபையின் பரிபாலனத்தில் உள்ள வன்னேரிக்குளம் 11-ம் கட்டைப் பாதை ரேட்டமைப்பு வேலைக்கு ஒப்பந்தம் அழைக்கப்படுகின்றது. உள்ளூராட்சிப் பகுதிகளிலோ, மற்றும் பகிரங்க வேலைப்பகுதிகளிலோ கொந்தராத்துக்காரர்களாகப் பதிவுபெற்றவர்கள் ஒப்பந்தம் கேட்க உரிமையுடையவர். இவ் வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 16-5-68 திகதி பிற்பகல் 1 மணிவரை விலைக்கு வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் 18-5-68 திகதி முற்பகல் 11 மணிக்கு கி. ச. அலுவலகத்தில் அக்கிராசனரிடம் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரருக்கு மட்டுமே ஒப்பந்தமுடிவு அனுப்பப்படும்.

1. கேள்விப் பத்திரம் விலை ரூபா 10-00.
2. கேள்விப் பிணைப் பணம் ரூபா 25-00.

சி. முகம்மது அப்துல்காதிர்
ஒப்பம்
அக்கிராசனர்
பல்லவராயன்கட்டுக் கிராமசபை,
கி. ச. அலுவலகம்.
வேரவில்.

8-5-68. 655

## அறிவித்தல்

கரவெட்டி, கரணவாய் தெற்கிலுள்ள மண்டானைச் சேர்ந்த காசியன் முருகன் ஆகிய நான் இனி "காசியன் முருகேசு" என அழைக்கப்படுவேன் என்பதையும் சகல தஸ்தாவேஜுகளிலும் கா. முருகேசு என்றே இனி கையொப்பமிடுவேன் என்பதையும் அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். 652

## கேள்வி விண்ணப்ப மூலம் விற்பனைக்கு

1. 32 பாவித்த லொறி ரயர் - ரியூப் 750X20.

2. 2 பாவித்துப் பழுதடைந்த அக்கன் சினிமர் நீர் இறைக்கும் இயந்திரங்கள்.

3. உடைந்த [லொறி] வில்லுத்தகடுகள்.

மேற் காட்டிய பொருட்கள் சமாச அலுவலக நேரத்தில் [மு.பகல் 8-00 தொடக்கம் பி. பகல் 5-00 வரை சமாசத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 30-5-68.

க. செங்காதரம்பிள்ளை,
தலைவர்,
வலி. மேற்கு ப. நோ.
கூ. ச. சமாசம்,
657 சங்கானை.

## மயிலிட்டி வென்றது

காங்கேசன்துறை செவ்.

மயிலிட்டி கண்ணகி படிப்பக விளையாட்டுக் கழகத்திற்கும் காங்கேசன்துறை படகுத்துறை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் காங்கேசன்துறை பட்டின சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றஉதை பந்தாட்டப் போட்டியில் மயிலிட்டி 4—1 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. க. தவபால சிங்கம் கடமையாற்றினர்.

## விநாயகர் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் தெற்கு 19-வது ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற 2-ம் பிரிவு கிரிக்கெட் சுற்றுப்போட்டி சாம்பியன்போட்டியில்விநாயகர் கோஷ்டியும் ரேயல் கோஷ்டியும் மோதிக்கொண்டன. மேற்படி நிலையமைதானத்தில் நடைபெற்ற இக் காரசாரமான மோதலில் விநாயகர் கோஷ்டி இனிங்சாலும் 8 ஓட்டங்களாலும் ரேயல் கோஷ்டியைத்தோற்கடித்தது. [வி. நி.]

## 10 ஓட்டங்களால் வெற்றி

குரும்பசிட்டி, செவ்

ஏழாலை மேற்கு சனசமூக நிலையத்தினரும் குரும்பசிட்டி உதயதாரகை இளைஞர் சங்கத்தினரும் கலந்து கொண்ட சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் 10 ஓட்டங்களால் எதிர்க் கோஷ்டியை குரும்பசிட்டி தோற்கடித்தது.

வெற்றியீட்டிய கோஷ்டியான குரும்பசிட்டி வீரர்கள் தமதுமுதலாவதுஇரண்டாவது இன்னிங்ஸ்களில் 39, 102 ஓட்டங்களைப்பெற்றனர். எதிர்க்கோஷ்டி முறையே 85, 46 ஓட்டங்களைப் பெற்றது.

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், புதன்

புத்தூர் விக்கன் மத்திய சனசமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டுவிழா நேற்று முன்தினம் வலிகிழக்கு காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

மன்றச்செயலாளர் திரு. நடராஜா, வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து வலிகிழக்கு கிராமாபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. என். ஜி. ஜோசெப், விளையாட்டுப் போதனாசிரியர் திரு. க. இராசேந்திரம், திரு. இ. நடராசா, திரு. ச. வேலாயுதபிள்ளை, திரு. க. மு. முருகேசு ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

திரு. இ. நல்லதம்பி அனைவருக்கும் நன்றிதெரிவித்துப் பேசினர்.

## ஐ. வி. கழகம் வெற்றி

ஊர்காவற்றுறை, செவ்

யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவுகளுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டியில் ஊர்காவற்றுறை புனிதஅந்தோனியார் கல்லூரி மைதானத்தில், சங்கானை விளையாட்டுக் கழக2ம் பிரிவினரும், ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரும் கலந்து கொண்டனர்.

ஆட்டமுடிவில் ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் 2-0 கோல்களால் வெற்றிபெற்றனர்.

## பொன்விழா நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்

1920-ம் ஆண்டு தொடக்கம் நிகழ்ந்துவரும் அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்டத்தின் 50-வது ஆண்டு நிறைவையொட்டிய பொன்விழா அடுத்தவருடம் கொண்டாடப்படவிருக்கின்றது. மேற்படி விழாவுக்காக தெரியப்பட்ட நிர்வாகிகள் விபரங்கள் வருமாறு:

தலைவர்: டாக்டர் ஏ. சிற்றம்பலம், இணைச்செயலாளர்கள்: திரு. த. ஆலாலசுந்தரம், திரு. இ. க. குமரையா. உபதலைவர்கள்: திரு. ஐ. எஸ். சதானந்தன், திரு. எஸ். இராசா, பொருளாளர்: திரு. பி. ராமநாதன்.

மேலும் உபபொருளாளர்களாக திரு. சி. சௌந்தரராஜா, த. குணரத்தினம், ஏ. திருலோகேஸ்வரன் [கொழும்புக்கிளை]. திரு. எஸ். ஏ. பேரின்பநாயகம் [லண்டன் கிளை] ஆகியோரும், நிருவாகசபை உறுப்பினராக திருவாளர்கள் த. சோமசேகரம், பொ. சுந்தரலிங்கம், எஸ். நடராசா, கி. சோமசேகரம் ரி. சபாரட்ணம், ஐ. எம். சண்முகநாதன், எஸ். நடராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## வடமராட்சி மல்யுத்தவீரர்

வல்வெட்டித்துறை, செவ்.

தொண்டமானாறு விக்னேஸ்வரா உடற்பயிற்சிக் கழகத்தாரால் நடாத்தப்பட்ட வடமராட்சி விளையாட்டு விழாவின் ஒரு அம்சமான மல்யுத்த சுற்றுப் போட்டி தொண்டமானாறு ஆங்கில பாடசாலையில்நடைபெற்றது. இப்போட்டியில் 1968-ம் ஆண்டு மல்யுத்த வீரனாக செல்வன் து. துரைரத்தினம் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

மற்றும் சாம்பியன்களாக தங்கவடிவேல், ஜெயநாதன், தங்கவேலாயுதம், மரியதாஸ், நல்லதம்பி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். திரு. செ. ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் வெற்றிவீரருக்கு பரிசில்கள் வழங்கினர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 8-5-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் அன் 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப் பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் அன் 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

**344 மீற்றர் அன் 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி 6-45 பாவலம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி— பி. பரம் இல்லைராஜா.

## வரி விளம்பரம்

### தேவை

தெசவு ஆசிரியர்

பதுளையில் உள்ள நெசவு நிலையம் ஒன்றுக்கு பயிற்றப்பட்ட நெசவு ஆசிரியர் உடனடியாகத் தேவை. திறமையும் அனுபவமும் விரும்பத்தக்கது. நேரில் விண்ணப்பிக்கவும். "சாமி எம்போரியம்" 124, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1474

### விற்பனைக்கு

காணி!

அராலி கிழக்கு அம்மன் கோவிலுக்கு அருகாமையில் 5 பரப்பு 10 1/2 குழியும், 10 3/4 பரப்பும் கொண்ட இரு காணிகள் சாதிபேதமில்லாமல்விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு திருமதி D. கிருஷ்ணர், இல. 9, றெக்சா ரோட், யாழ்ப்பாணம். 1478

## "திடகாத்திரமாக இருக்க வழி"

யாழ்ப்பாணம், புதன்

"விளையாட்டுக்கள், தேகப்பயிற்சி ஆகியவற்றினுல் தேகம் சுறுசுறுப்படைந்து நீண்ட ஆயுளுடனும், திடகாத்திரமாகவும் இருக்கவழி கோலுகின்றது" என்று வேலணை ஐக்கிய விளையாட்டுக்கழக வருடாந்தக் கூட்டத்தில் பேசும்போது டாக்டர் கே. வி. கே. ஜெயச்சந்திரா குறிப்பிட்டார்.

வேலணை ஐக்கிய விளையாட்டுக்கழக புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: கே. பாலசுப்பிரமணியம், காரியதரிசி: கே. வி. கே. ஜெயச்சந்திரா, தனாதிகாரி: செ. இராஜலிங்கம்.

மூவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## தொழிலாளர் சாதனை

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலையில் வந்து நிற்கும் 'அஸ்ரர்' என்னும் கப்பல் ஆறுவது நாள் வேலை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இவ்விறக்குமதி வேலையை யாழ். மாவட்டத் துறைமுகத்தொழிலாளர் சமாசம் மேற்கொண்டுள்ளது நேற்று முன்தினம் எட்டு மணித்தியாலத்தில் 1023 தொன் நிறையுள்ள 10,232 மூடை அரிசியை தொழிலாளர்கள் இறக்குமதி செய்துள்ளனர்.

இவ்வித சாதனையை ஏற்படுத்துவதில் உணவுஇலாகாவைச்சேர்ந்த உத்தியோகத்தர்களும், ரலி குமாஸ்தாக்களும் உதவியளித்தது குறிப்பிடத்தக்கது.

## குடும்பம் தப்பியது

முல்லைத்தீவு, செவ்.

இடியினுல் தாக்குண்ட ஒரு குடும்பம் தெய்வாதீனமாக உயிர் தப்பிய சம்பவம் கொக்குத் தொடுவாயில் நிகழ்ந்துள்ளது. சுப்பிரமணியம் என்பவரின் குடும்பமே இடியின் தாக்குதலிலிருந்து தப்பியது. அவரது வீட்டிற்கும், கொக்குத்தொடுவாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் இடையே இடியேறு வீழ்ந்ததால் வீடு பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியதாம். இவ் வீட்டிலிருந்த எட்டுப்பேரடங்கிய குடும்பம் எவ்வித காயங்களுமின்றி உயிர் தப்பியது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கெப்பிட்டல் பிளாஸா
[கொழும்பு]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
தினசரி: 2-30, 6-15, 9-30 மணி.
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
நடித்த
பெற்றால்தான் பிள்ளையா

கிங்ஸ்லி [கொழும்பு]
சிவாஜிகணேசன், சாவித்திரி
நடித்த
பாசமலர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி, ஜெமினி, சாவித்திரி
நடித்த
சரஸ்வதி சபதம்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, &9-45 P. M.
FAY WRAY
in
KING KONG

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜிகணேசன்
டி. ஆர். ராஜகுமாரி
நடிக்கும்
மனோகரா

REGAL JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 P. M.
Curd Jurgens
in
Outcasts of
Glory


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டில் பெரு வெள்ளம் பல உயிர் பலி; வீடுகள் சேதம்

## தொங்கு பாலத்துடன் ஆறு பேர் அடித்துச் செல்லப்பட்ட கோரம்

கொழும்பு, செவ்வாய்

மலைநாட்டில் சில பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் கடும்மழை காரணமாக கம்பளை, இரத்தினபுரி, நாவலப்பிட்டி, தெரணியகலை ஆகிய இடங்களில் பெருவெள்ளம் ஏற்பட்டு வருகிறது. கம்பளைப் பகுதியே வெள்ளத்தினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பலர் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டு உயிர் நீத்துள்ளனர். வீடுகள் பலவும் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டு ஆயிரக்கணக்கானோர் அகதிகளாகியுள்ளனர்.

கம்பளையில் தொங்கு பாலம் ஒன்றின்மீது நின்று வெள்ளப் பெருக்கை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஆறுபேர், தொங்கு பாலத்துடன் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டனர். பொருவதெனியா என்ற இடத்தில் இப்பரிதாப சம்பவம் நிகழ்ந்தது. இதுதவிர மற்றும் சிலஇடங்களிலும் மூன்று தொங்கு பாலங்கள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டன.

கெரபோல என்ற இடத்தில் 29 வயது இளைஞர் கலுபண்டா என்பவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார். ஜெயராம் என்பவரும் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டார்.

இரத்தினபுரி, நாவலப்பிட்டியிலும் நூற்றுக் கணக்கான வீடுகள் வெள்ளத்தில் அமிழ்ந்து சேதமடைந்துள்ளன. வீடுகள், வீதிகள், வயல்கள் எங்கும் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன.

மகாவலிகங்கையும் களனிகங்கையும் பெருக்கெடுத்திருப்பதால் மலைநாட்டின் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்பாய்ந்து ஆயிரக்கணக்கானோர் வீடிழந்து அகதிகளாகியுள்ளனர். இரத்தினபுரியிலும் கம்பளையிலும்மட்டும் சுமார் 5000 மக்கள் வீடு வாசல்களை இழந்துள்ளனராம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணஉதவி வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

## 6மாத குழந்தை தவிக்கிறது: தாய் தடுப்பு முகாமில்

யாழ்ப்பாணம், புதன்

ஆறுமாதப் பச்சிளங் குழந்தை ஒன்று தாயிடமிருந்து பரிதாபமாகப்பிரிக்கப்பட்டது. குழந்தையைத் தவிக்கவிட்டுதாயைத்தடுப்பு முகாமுக்குக் கொண்டுசென்றனர் பொலிஸார்.

இந்த நெஞ்சை உருக்கும் சம்பவம் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலுள்ள சிவல் தொழிலாளி ஒருவரின் மனைவியே கைதுசெய்யப்பட்டு கொம்பனித்தெரு தடுப்பு முகாமுக்கு நேற்று மாலை அனுப்பிவைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள குறிப்பிட்ட சிவல் தொழிலாளி ஒருவருட காலத்துக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருக்கும் இளம்பெண்ணை இந்தியாவிற்குச்சென்று திருமணம் செய்து இலங்கைக்கு அழைத்துவந்தாராம். இங்கு வந்த பின்னர் இவர்களுக்கு குழந்தை பிறந்ததாம். ஆனால் கைதுசெய்யப்பட்ட பெண்ணுக்கு இலங்கையில் வசிக்க அரசாங்கம்கொடுத்த ஒருவருட 'விஸா' முடிவடைந்ததும் சட்டவிரோதக் குடியேற்ற இலாகா அதிகாரியின் உத்தரவுக்கிணங்க பொலிஸார் இப்பெண்ணை நேற்றுக் கைதுசெய்தனராம்.

ஆறுமாதக் குழந்தையையும் கையில் ஏந்தியவண்ணம் அப் பெண்ணின் கணவன் தனது சோகக்கதையை நேற்று பொலிஸ் சுப்பிரின்டனிடம் தெரிவித்தார். தனது மனைவிக்கு மேலும் ஒருவருட 'விஸா' எடுப்பதற்காக இக்கணவன் தன் குழந்தையுடன் தனது மனைவி கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட புகைவண்டியிலேயேகொழும்புசென்றுள்ளார். [கா. நி]

## அண்ணு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்திரநிலை பற்றி அண்ணுவிடம் கேட்டபொழுது இந்தியாவில் பல பிரச்னைகள் உண்டு. ஜப்பானில் அடிக்கடி பூகம்பங்கள் ஏற்படுவதை ஜப்பான் மக்கள் எப்படிச் சகித்துக்கொண்டு வருகிறார்களோ அப்படியே இந்திய மக்களும் தமது பிரச்னைகளைச் சகஜமாக ஏற்றுக்கொள்ளப் பழகிவருகிறார்கள் என்று அவர் பதிலளித்தார். மொழிப்பிரச்னை பற்றிக் கேட்டபோது பாரதம், பரந்த நாடு. அங்கே ஏற்படும் பிரச்னைகளைச் சமாளிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்றும் இந்தியாவின் எதிர்காலத்தில் தமக்கு நம்பிக்கை உண்டென்றும் திரு. அண்ணுதுரை தெரிவித்தார்.

திரு. அண்ணுதுரை ஜப்பான் பிரதமர் ஸாட்டோவையும் சந்திக்கவிருக்கிறார்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன்துறை தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டரான திரு. எஸ். வி. மூர்த்தி கொழும்பு லஞ்சத் தடுப்பு பொலிஸ் இலாகாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் அடுத்த மாதம் முதல் இப்புதிய பதவியைப் பொறுப்பேற்பார். (கா. நி)


## இன்று

### வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவில்

### வசந்தோற்சவ விழா

வல்வை முத்துமாரி அம்மன் கோவிலில் இன்று [8-5-68] புதன்கிழமை இரவு 9 மணியளவில் தென்னிந்தியாவிலிருந்து விசேஷமாகவரவழைக்கப்பட்டிருக்கும்

'அருட்பா அரசி'

### குருவாயூர் பொன்னம்மாள்

அவர்களின் அருட்பா அருள் இசை விருந்து சிறந்த பக்கவாத்தியங்களுடன் இடம்பெறும்.

மற்றும் இலங்கையின் தலைசிறந்த வித்வான்களின் தவில் நாதசுரக் கச்சேரிகளும் நடனக்கச்சேரிகளும் வாணவேடிக்கைகளும் இடம்பெறும்.

இரவு மின்அலங்காரத்துடன் கைலாசவாகனத்தில் அம்பாள் வீதிவலம் வருவார். 653


## அவநம்பிக்கைப் பிரேரணை தோல்வி

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சியினர் தாக்கல் செய்திருந்த நம்பிக்கையில்லாப்பிரேரணைபெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இ.போ.சபையின் முன்னாள் தலைவரை மீண்டும் தலைவராக நியமித்ததை எதிர்த்து இப்பிரேரணை தாக்கல் செய்யப்பட்டது. பிரேரணையை டாக்டர் என். எம். பெரேரா தாக்கல் செய்திருந்தார். திரு. பெர்னுட் சொய்ஸா ஆமோதித்திருந்தார். பிரேரணைக்கு எதிராக 78 வாக்குகளும், சாதகமாக 52 வாக்குகளும் பதிவாகின.

## 32பேர் தற்காலிக வேலைநீக்கம்

நல்லூர், செவ்வாய்

வல்லையிலுள்ள இலங்கை நூல் நூற்றல் நெய்தல் ஆலைவரையறை ஸ்தாபனத்திலிருந்து 32 பேர் தற்காலிக வேலைநீக்கஞ்செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

நெசவாலையில் உள்ள 'கன்ரீனி'ல் சோடாப் போத்தல்கள் களவுபோனதாகவும், [illegible] வேலைசெய்யும் ஊழியர்களை ரூபா 350 கட்டுமாறு நிர்வாகத்தினர் உத்தரவிட்டதாகவும், ஊழியர்கள் மறுத்துவிடவே இவர்களைத் தற்காலிக வேலைநீக்கஞ் செய்ததாகவும் கூறப்படுகிறது.

## 'டைனமைட்' வைத்து மீன் பிடித்ததாக வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

'டைனமட்' வைத்து மீன் பிடித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு வழக்கில் 3 எதிரிகளுக்கும் தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அல்லது தலா 6 மாதக் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு வழக்கை விசாரணைசெய்த யாழ்ப்பாணம் மேலதிக மாஜிஸ்திரேட் திரு. டலரத்ன தீர்ப்பளித்தார்.

மன்னாரைச் சேர்ந்த செபஸ்தியான் ஐயாம்பிள்ளை, செபஸ்தி ஆகிய மூவரும் இவ்வருடம் ஜனவரி மாதம் 22-ந் திகதி மாலைதீவுக் கடலில் டைனமட் வைத்து மீன்பிடித்ததாக மீன்பிடி இலாகாவினால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

சந்தேக நபர்களைக் கைது செய்த மீன்பிடி இலாகாவைச்சேர்ந்த இராமநாதன், பி. எச். ரீ. டி சில்வா ஆகியோரும் விசாரணையின்போது சாட்சியமளித்தபின்னர் மாஜிஸ்திரேட் மேற்கண்ட தீர்ப்பு வழங்கினர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் அம்பிரட் துரையப்பா ஆஜரானர். மீன்பிடி இலாகாவைச்சேர்ந்த திரு. ரி. பொன்னம்பலம் வழக்கை நடத்தினர். [கா. நி.]

## வேலைக்கு திரும்பினர்

மட்டக்களப்பு, செவ்.

சென்ற 18 நாட்களாக வேலைநிறுத்தம் செய்துவந்த மட்டக்களப்பு மாநகரசபை நகரசுத்தித் தொழிலாளர்கள் மட்டக்களப்பு மேயரும் எம். பி.யுமான திரு. இராசதுரை நடத்திய சமரசப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து வேலைக்குத் திரும்பினர்.

அகில இலங்கை உள்ளூராட்சி ஸ்தாபன தொழிலாளர் சங்கக் காரியதரிசியை பொலிஸார் தாக்கியதை ஆட்சேபித்தே மேற்படி தொழிலாளர்கள் சுமார் 40 பேர் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

### நுணசை முருகமூர்த்தி கோவில் உற்சவம்:

## 'உண்மை சைவர்களாகவாழ சமய தீட்சை பெறவேண்டும்'

அளவெட்டி, செவ்.

''வெண்ணீறுதரித்தால் மாத்திரம் உண்மைச் சைவர்களாக முடியாது. சமய தீட்சை பெற்ருல்தான் உண்மைச் சைவசமயிகளாக முடியும். சமயதீட்சை பெருமல் வாழ்கிறவர்கள் சைவ சமயப் பரம்பரையில் வந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளலாம். உண்மைச் சைவர்களானுல் தான் சிவத்தின் தொடர்பு ஏற்படும். எம்மதத்தவர்களானுலும் சமய நெறி தவருது ஒழுகுபவர்களே இறை அருளைப்பெற முடியும்.''

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் 7-ம் நாள் விழாவில் கலந்து சமயச் சிறப்புச் சொற்பொழிவாற்றிய திரு. த. குமாரசுவாமிப் புலவர் மேற்கண்டவாறு கூறினர்.

கோவில் மண்டபத்தில் சைவசீலராக அமர்ந்திருந்த பெருந்தொகையான பக்தர்கள் மத்தியில் அவர் தொடர்ந்து பேசுகையில், முருகன் வேறு தமிழ் வேறு அல்ல. முருகன் என்ருல் தமிழ்தான். முருகன் முன்னிலையில் தமிழால் பேசும்போது சொற்பிழைகள் இருந்தாலும் பொறுத்தருள்வார்.

சைவத்தை அழிக்க, சமண மதம் தலையெடுத்தபோது ஒரு பெண்மணியால் தான் காப்பாற்ற முடிந்தது. எனவே இன்று பெண்கள் சமய தீட்சை பெற்று உங்கள் இளஞ் சந்ததியினரும் உண்மைச் சைவர்களாக திகழ வழிவகுப்பீர்களாக எனக் கேட்டுக்கொண்டார். அத்தோடு சைவர்கள், எமது மத்தியில் தற்போது நிலவிவரும் புலால் உண்ணும் வழக்கத்தை நிறுத்தி, சைவ சீலராக விளங்கவேண்டும்'' என்றும் வற்புறுத்தினர்.

### இன்று

'அருணகிரி சுவாமிகள் சரிதம்' பற்றி சங்கீத பூஷணம் சி. விநாசித்தம்பி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## தீவுப்பகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கோ மட்டும் உரிமையல்ல. ஜனநாயகத்துக்கு சாதி, சமூக வேறுபாடு இருக்க முடியாது. ஆள் பதிவு மசோதாவும் யாழ்ப்பாணத்திற் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்கள் குறிப்பிட்ட அளவு பொருள்களைத்தான் உபயோகிக்கலாம் என்று அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவும் சட்ட விரோதக் குடியேற்றத் தடுப்பு, கள்ளக் கடத்தல் தடுப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள, ஜனநாயக சுதந்திரத்துக்கு விரோதமான செயல் என்று திரு. நவரத்தினம் சொன்னர். இந்த நடவடிக்கைகளினுல் தமிழ் பேசும் மக்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே பாதுகாப்பாக வாழ முடியாது என்றும் அவர் கூறினர்.

தென்னு பிரிக்காவைத் தவிர உலகில் வேறு எந்த நாட்டிலும் இந்த ஆள் பதிவு முறையில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இதன் பின் திரு. நவரத்தினம் எதிர்த்தரப்புக்கு நடந்து சென்று ஓர் ஆசனத்தில் அமர்ந்ததும் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் கரகோஷம் செய்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## ஹனேய் தூதுக்குழு பாரிஸ் சேர்ந்தது

பாரிஸ், மே. 7

வியட்னும் சமாதானப் பேச்சுக்களில் பங்கு பற்றுவதற்காக முதலாவது ஹனேய் தூதுக்குழு இன்று பாரிஸ் வந்து சேர்ந்தது. இரண்டு பெண் அங்கத்தவர்களையும் கொண்டு இக்குழுக்கு சுர்ணல் லோ தலைமை வகிக்கிருர்.

## ரூபா 200 அபராதம்

கண்டி, செவ்வாய்

சாப்புச் சட்டத்தை மீறிய குற்றத்தை ஒப்புக்கொண்ட இருவருக்கு கண்டி மாஜிஸ்திரேட் திரு. டி. ஈ. தர்மசேகரா தலா 200 ரூபா அபராதம் விதித்தார்.

கண்டிமத்தியசந்தையைச் சேர்ந்த எஸ். எம். ஹனிபா என்பவர் தனது ஜவுளிக் கடையை குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மே மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org